# அறவியல் கல்வி விழுமியங்கள்

கிருபாசக்தி கருணா
முதுகலை, இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

ஒவ்வொரு நாடும் மக்களும் எதிர்நோக்கும் பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகளுக்குக் கல்வி மூலமே தீர்வைக் காணலாம் என்ற சிந்தனை அமைகின்ற போது அச்சிந்தனைக்கு மேலும் வலுவூட்டுவதாக அமைவது விழுமியக் கல்வி தொடர்பான கருத்துக்கள் ஆகும். கல்வியின் குறிக்கோள் இளைய தலைமுறையினருக்கு முன்பு வாழ்ந்தவர்கள் கண்டறிந்த உண்மைகளை, உணர்வுகளை, அனுபவங்களை விழுமியங்களை எடுத்துக்கூறி அவற்றைப் பின்பற்றி மேலும் முன்னேற ஊக்குவிப்பது ஆகும். ஆனால், இன்றைய கல்வி முறையை நோக்கும்போது மாணவர்களிடம் அறிவை வளர்த்திச் செல்லுகின்ற அளவிற்கு மனித விழுமியங்களை வளர்ப்பதாக அமையவில்லை. ஆகவே, பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் வழங்கப்படும் கல்வி அறவியல் கல்வியாக அமைய வேண்டும். அதன் மூலம் நமது உடல், உள்ளம், ஆன்மா இவற்றைப் பற்றி மாணவர்களுக்கு நல்ல தெளிவு கிடைக்கவேண்டும். மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் விழுமியங்கள் என்ன என்பதை உணர்ந்து அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். அதன் மூலம் உடலில் உறுதி, மனதில் தெளிவு, ஆன்மீக உயர்வு பெற்ற இளைய சமுதாயம் வாழவேண்டும் என்ற நோக்கில் பல மகான்கள் கருத்துக்களைக் கூறி வலியுறுத்தி வருகின்றனர். வேதாத்திரிய மகரிஷி கூட இக்கருத்தினை வலியுறுத்தியுள்ளார். அவர்தம் அறவுரைகளில் பொதிந்துள்ள கருத்துக்களின் தொகுப்பாக இக்கட்டுரை அமைகிறது.

## விழுமியம்

சமுதாயத்தில் முழுமையும் மகிழ்ச்சியும், அமைதியும், பொங்கித் ததும்ப வேண்டுமெனில் ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கென்று சில கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்துக் கொள்ள வேண்டும். இந்தக் கடமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் தொகுப்பு களைத் தான் நாம் மதிப்புகள் அல்லது விழுமியங்கள் (Values) என்றும் நெறிகள் என்றும் கூறுகின்றோம்.

ஒரு மனிதன் பிறரிடமிருந்து எந்தெந்தப் பண்புகளை எதிர்ப் பார்க்கிறானோ, அந்தப் பண்புகளுக்குத் தானும் உட்பட வேண்டும்

என எண்ணும் போது, அந்தப் பண்புகள் அவன் பின்பற்ற வேண்டிய மதிப்புகளாக மாறி விடுகின்றன. இந்த மதிப்புகளை (Values) நாம் மதிக்கின்ற அளவே நம் வாழ்க்கையின் உயர்வு அமைகிறது. மதிப்புகளை மதிக்காத வாழ்க்கையை யாரும் மதிப்பது இல்லை. மதிப்புகளை அறிவது அறிவின் வளம். அதைப் பின்பற்றுகிற பக்குவத்தைத் தருவது நமது மனதின் வளம். மனதின் வளத்தைப் பெருக்கும் கலையே அறவியல் கல்வி ஆகும்.

## இக்காலக்கல்வி

அண்மைக் காலத்தில் பொருள் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டதே கல்வி என்ற தவறான எண்ணத்தினால் ஒரு தொழில் முறையை போதிப்பதற்கு நாம் எடுத்துக் கொள்கின்ற முயற்சியாகக் கல்வியை மாற்றிவிட்டனர். நவீன கல்விக்கான இயந்திரங்களுடன் போராடும் நமது கல்வி முறை, நல்ல கருத்துக்களை, நல்ல உள்ளங்களை உருவாக்குகிற உயர்ந்த மதிப்புகளை மாணவர்களுக்குத் தரவேண்டும் என்று கவனம் கொள்ளவில்லை. திறமையான ஆனால் பண்பாடில்லாத மனிதர்களை உருவாக்குகிற தொழிற்சாலையாக நமது கல்விச் சாலைகள் மாறி வருவதைக் கண்டு, ஐக்கிய நாட்டு சபையின் முன்னாள் பொதுச்செயலர் ''ஊதான்ட்'' அவர்கள் கூறியதை மகரிஷி அவர்கள் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். அதை இங்கே குறிப்பிடுவது சாலப் பொருந்தும். ''நம்கல்வி ஒரு மனிதனை ஒரு மருத்துவராகவோ, பொறியாளராகவோ, ஆசிரியராகவோ உருவாக்கு கிறது. ஆனால், மனிதனை உண்மையான மனிதனாக உருவாக்கு வதில்லை''.(Our education makes a man a doctor, an engineer or a teacher but does not make a man really a man).

## அறவியல் கல்வி விழுமியங்கள்

இன்றைய கல்வித் திட்டம் எழுத்தறிவு, தொழில் அறிவு ஆகிய இரண்டை மட்டுமே பிரதானமாகக் கொண்டுள்ளது. மனிதன் நல்ல பண்புள்ள மனிதனாக வாழவும், ஆறாம் அறிவை வளர்த்துப் பெருக்கி இறைநிலை உணர்ந்து முழுமை பெறவும், இயற்கைத் தத்துவ அறிவு நம் கல்வித் திட்டத்தில் இடம்பெற வேண்டும். அப்போது தான் அறநெறிவாழ்வு இயல்பாக அமையும். இவ்வாறான இயற்கைத் தத்துவக்கல்வியுடன், மனித நேயப் பண்புகளையும், உடல் நலத்தையும் மேம்படுத்துகின்ற ஒழுக்கக் கல்வியும் இன்றைய இளைய தலைமுறையினராகிய மாணவர்களுக்கு அவசிய தேவையாகும்.

இந்த நோக்கில் வழங்கப்படும் அறவியல் கல்வி பின்வரும் விழுமியங்களை மாணவர்களுக்குத் தரக்கூடியதாக அமையவேண்டும்.

1. உயர்வுள்ளல்
2. நேர்மை
3. தன்னம்பிக்கை
4. தெளிவு
5. துணிவு
6. பொறுப்புணர்வு
7. நன்றியுணர்வு
8. பிரார்த்தனை
9. பிறரை மனதார வாழ்த்துதல்

## 1. உயர்வுள்ளல்

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற திருவள்ளுவர் வாக்குப் படி உயர்ந்த எண்ணங்களையே சிந்தனை செய்ய வேண்டும். இதன் பயனாக வாழ்க்கையில் நேர்மை, தன்னம்பிக்கை, துணிவு, தெளிவு, பொறுப்புணர்வு, நன்றியுணர்வு போன்ற நல்ல பண்புகள் மனிதனுக்கு ஏற்படுகின்றன.

## 2. நேர்மை

எண்ணம் சொல் என்பவற்றில் உண்மையும் செயலில் நேர்மையும் இருக்கவேண்டும். உண்மையான செயலை அதனால் தனக்குத் துன்பம் வந்தாலும் வராவிட்டாலும் மற்றவர்களுக்கு இதனால் நன்மை வரவேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் போது அது நேர்மையான செயலாகும்.

நேர்மைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து, உலகத்தால் இன்றளவும் போற்றப்படும் காந்தியடிகளையே நேர்மைக்கு எடுத்துக்காட்டாக காட்டுகின்றார் மகரிஷி அவர்கள்.

## 3. தன்னம்பிக்கை

உயர்ந்த எண்ணங்களை எண்ணுவதால், மனதில் தன்னம்பிக்கை வலுப்பெறுகிறது. எதுவும் என்னால் முடியும் என்ற எண்ணம் மேலோங்கி வளரச் செய்கிறது. தன்னம்பிக்கை உடையவர்கள் எந்தச் சூழ்நிலையிலும், வாழ்வில் வெற்றி பெற்று உயர்வார்கள்.

## 4. தெளிவு

தெளிவு என்பதன் பொருள் வேண்டாதவற்றை நீக்கிய தெளிந்த நிலை என்பது பொருள் ஆகும். குளத்து நீரிலே சேறும், நீரும் கலந்திருக்கும். இதைத் தனியாக ஒரு பானையில் எடுத்து வைத்துச்

சிறிது நேரம் கழித்துப் பார்த்தால், சேறு அழுக்கு அனைத்தும் அடியிலே தேங்கிநிற்க, மேலேயுள்ள நீர் தெளிந்ததாக இருக்கும். தெளிந்த மனமுடையோருக்கு எல்லாம் எளிதில் விளங்கிவிடும். அறிவிலே தெளிவு பெற்றால் எண்ணத்திலே தெளிவு, சொல், செயலிலே தெளிவு ஏற்பட்டுவிடும்.

## 5. துணிவு

தெளிவு வந்தால் தான் துணிவு வரும். தெளிவில்லாமல் ஐயம் இருந்தால் துணிவு வராது. ''துணிந்தவனுக்குத் தூக்கு மேடை பஞ்சு மெத்தை'', ''துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டும்'' என்ற பழமொழிகள் துணிவின் தன்மையை விளக்குகின்றன.

உலகின் பெரும்பகுதியை ஆண்ட ஆங்கிலேயரை எதிர்த்துக் காந்தியடிகள் அகிம்சை நெறியைக் கடைப்பிடித்து துணிந்து போராடி இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுத்தந்தமையை இவ்விடத்தில் நினைவு கூறலாம்.

## 6. பொறுப்புணர்வு

அறிவின் தெளிவால் வாழ்க்கையில் பொறுப்புணர்வு ஏற்படுகிறது. அறிவிலே தெளிவு பெற்ற மாணவர்கள் பெற்றோர், ஆசிரியரிடத்தில், கல்விநிலையங்களில், பொது இடங்களில், சமுதாய நிகழ்வுகளில் தங்களின் பொறுப்புக்களை உணர்ந்து சிறப்புடன் செயற்படுவார்கள்.

## 7. நன்றியுணர்வு

மனவளம் பெற்றவர்கள் நன்றியுணர்வு எப்போதும் குன்றாமல் இருக்கும் பண்புள்ளம் கொண்டவர்களாகவே இருப்பர். இந்தச் சமுதாயம் எமக்குத் தேவையான எல்லாவற்றையும் தருகிறது. அந்தச் சமுதாயத்திற்கு எந்த வகையிலும் நாம் நல்லது செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடு வாழவேண்டும். இது நன்றியுணர்வைக் காட்டுகிறது.

## 8. பிரார்த்தனை

இறைவனிடம் வேண்டுதலைப் பிரார்த்தனை என்று கூறப் படுகிறது. அறிவிலே தெளிவு பெற்றோர் பிரார்த்தனை மூலம் எதையும் சாதிக்க முயல்வர். தன்னிடமுள்ள தீயகுணங்களை அகற்றவும், நல்ல செயல்களைச் செய்யவும், தானும் நலமாக வாழ்ந்து பிறரையும் நலமாக வாழ வைக்கவும் பிரார்த்தனை செய்வர்.

## 9. வாழ்த்துதல்

வாழ்த்துதல் என்பது ஒரு செயல். இது ஒரு தெய்வீகச் செயலாகும். பிறர் நலமாக வாழ வேண்டும் என்ற கருத்தோடு எழும் ஒலியே வாழ்த்து என்ற வார்த்தையாகும். எனவே, எப்போதும் நாம் பிறரை வாழ்த்திக் கொண்டிருக்கும் நல்ல பழக்கத்தை மாணவப் பருவத்திலிருந்தே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

அறவியல் கல்வி சமுதாயத்தின் புதிய மாற்றங்களுக்குத் தலைமை தாங்கும் தனி நபர்களை ஆங்காங்கே உருவாக்கும். எல்லோருக்கும், எக்காலத்திலும் நன்மை விளைவிக்கக் கூடிய தூய்மையான எண்ணங்களையும், செயல்களையும் உடைய இளைய சமுதாயத்தை உருவாக்கும். இன்றைய உலகில் ஏற்படும் குழப்பம், தேவையற்ற போட்டி மனப்பான்மைகள் போன்றவைகள் மூலம் மாணவர்கள் மத்தியில் தீய சிந்தனைகளும் பழக்க வழக்கங்களும் ஏற்படுகின்றன. இதன் மூலம் அவர்கள் நடத்தையில் சீரற்ற மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவைகள் எல்லாவற்றையும் களைந்த வளமான எதிர்காலத்தை இந்த இளைய சமுதாயத்திற்குக் கொடுப்பது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் தலையாய கடமையாகும்.